# புதுச்சேரி காங்கிரஸின் வாக்குறுதி 2026

SCAN TO
CONNECT ON



புதுவை
மக்களின்
ஒரே நம்பிக்கை
காங்கிரஸ்

வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான ஆளுகைக்கான ஒரு தொலைநோக்குப் பார்வை

புதுச்சேரி ஒரு முக்கியமான மற்றும் மாற்றத்திற்கான ஒரு கட்டத்தில் இருக்கிறது. இங்குள்ள மக்களின் விருப்பம் ஒன்று தான் - நேர்மையான, திறமையான மற்றும் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உண்மையாக செயல்படும் ஒரு அரசாங்கம். இந்தத் தேர்தல் அறிக்கை மாற்றத்தை விரும்பும் மக்களின் நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் தொலைநோக்குப் பார்வை அனைத்துத் துறைகளிலும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் கொண்ட ஆளுமையில் வேரூன்றியுள்ளது. இது பொது வளங்களைத் திறம்படப் பயன்படுத்துவதோடு, ஒவ்வொரு குடிமகனும் கண்ணியம், நியாயம் மற்றும் சம வாய்ப்புகளைப் பெறுவதையும் உறுதி செய்கிறது.

புதுச்சேரியில் உள்ள ஒவ்வொரு தனிநபரின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான அர்ப்பணிப்பு இந்தத் தொலைநோக்குப் பார்வையின் மையத்தில் உள்ளது. தரமான சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளுக்கான அணுகல் சலுகையாக இல்லாமல், உரிமையாக இருக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

உண்மையான முன்னேற்றம் என்பது வலுவான சமூக அடித்தளத்தால் கட்டப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் அணுகுமுறை மத நல்லிணக்கம், மதச்சார்பற்ற விழுமியங்கள், அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. பெண்கள் பாதுகாப்பு, இளைஞர் மேம்பாடு மற்றும் நலிவடைந்த சமூகங்களுக்கான ஆதரவு ஆகியவற்றிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும், இதன் மூலம் யாரும் பின்தங்கிவிடாமல் இருப்பது உறுதிசெய்யப்படும்.

வளர்ச்சி என்பது பொறுப்புடனும், நீடித்த நிலைத்தன்மையுடனும் இருக்க வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அதே வேளையில், மாசற்ற, சமச்சீரான தொழில்துறை வளர்ச்சியை வளர்ப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில், எங்கள் கொள்கைகள் புத்தாக்கத்தையும் முதலீட்டையும் தீவிரமாக ஊக்குவிக்கும்.

கிராமப்புற மற்றும் பாரம்பரியத் துறைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நாங்கள் வேளாண்மை மற்றும் கால்நடை மேம்பாட்டை வலுப்படுத்துவோம்; நவீன ஆதரவு அமைப்புகளை வழங்கி, விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலாளர்களின் வருமானத்தை மேம்படுத்துவோம்.

உள்கட்டமைப்பு மேம்பாடு எங்கள் வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாக இருக்கும். நவீனமான மற்றும் திறமையான உள்கட்டமைப்பு, நன்கு திட்டமிடப்பட்ட நகர்ப்புறங்கள், மேம்பட்ட போக்குவரத்து இணைப்பு வசதிகள் ஆகியவற்றுடன், நமது செழுமையான கலாச்சாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாத்து, சுற்றுலாத் துறையை வலுப்படுத்திய ஒரு புதிய புதுச்சேரியை நாங்கள் காண்கிறோம்.

ஆளுகையை எளிமையாகவும் மேலும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்காக, காகிதப் பணிகளைக் குறைக்கவும், சேவை வழங்கலை மேம்படுத்தவும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும், மின்-ஆளுகை அமைப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த செயல்முறைகள் உள்ளிட்ட தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை நாங்கள் பின்பற்றுவோம். போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட நகர்ப்புற சவால்கள், போக்குவரத்து நெரிசல் இல்லாத மண்டலங்கள், திறன்மிகு போக்குவரத்துத் திட்டமிடல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் மூலம் தீர்க்கப்படும்.

இந்தத் தேர்தல் அறிக்கை வெறும் வாக்குறுதிகளின் ஆவணம் அல்ல மக்களுக்காக ஆளுகை செயல்படும், வளர்ச்சி ஒவ்வொரு வீட்டையும் சென்றடையும் முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, எதிர்காலத்திற்குத் தயாரான புதுச்சேரியைக் கட்டமைப்பதற்கான எங்கள் உறுதிமொழியாகும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தெளிவு, நோக்கம் மற்றும் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான உறுதியுடன் முன்னோக்கிச் செல்வோம்.



# ஆட்சி மற்றும் நிர்வாகம்

**புதுச்சேரிக்கு முழுமையான மாநில அந்தஸ்து**

புதுச்சேரிக்கு முழுமையான மாநில அந்தஸ்து பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

புதுச்சேரி அரசு மத்திய அரசிடம் பெற்ற அனைத்து கடன்களையும் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**நிர்வாக மேலாண்மை**

அனைத்துத் துறைகளிலும் வெளிப்படையான மற்றும் நேர்மையான நிர்வாகம் உறுதிசெய்யப்படும்.

சமூக-பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், நல்வாழ்வை உறுதி செய்தல், சிக்கலற்ற சூழல் அமைப்பு, சமூக நல்லிணக்கம் மற்றும் மதச்சார்பின்மையைப் பேணுவதே எங்களின் தாரக மந்திரம்.

**அனைவருக்கும் இலவசக் கல்வி**

பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமான இலவசக் கல்வி வழங்கப்படும்.

**பெண்கள் பாதுகாப்பு**

பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற, பாதுகாப்பான மற்றும் மரியாதையான சூழலை உருவாக்குவோம்.

**மாசு இல்லாத தொழில் வளர்ச்சி**

சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத வகையில் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.

**நீர் மேலாண்மை**

நீர் நிலைகள் பாதுகாக்கப்பட்டு, முறையான நீர் மேலாண்மைத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

**வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு**

விவசாயத் துறை மற்றும் கால்நடை மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**கட்டமைப்பு மற்றும் சுற்றுலா**

நவீன உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதன் மூலமும், சுற்றுலாத் துறையை திறம்பட மேம்படுத்துவதன் மூலமும் புதுச்சேரியின் வளர்ச்சியை விரைவுபடுத்துவோம்.

புதுச்சேரியை 15வது நிதி கமிஷனில் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஆட்சிக்கு வந்த ஆறு மாதத்தில் உள்ளாட்சி தேர்தலை நடத்தி முடித்து, மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

மத்திய சம்பள கமிஷன் பரிந்துரைகள் உடனடியாக புதுச்சேரி மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசு ஊழியர்களின் நலன் மற்றும் குறைகளைத் தீர்க்க குழு அமைக்கப்படும்.



# வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி

**ஒவ்வொரு குடும்பத்திற்கும் உறுதி செய்யப்பட்ட வேலை**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும், நிலையான வருமானத்தையும் உறுதி செய்து, அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் தீவிர வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் 30,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**வேலை இல்லாதவர்களுக்கு வருமான ஆதாரம்**
வேலையில்லா பட்டதாரிகள் +2, ஐடிஐ, டிப்ளோமா, இளநிலை மற்றும் முதுநிலை படித்தவர்களுக்கு மாதம் ரூ.2000 உதவித்தொகையாக வழங்கப்படும்.

**அரசு வேலைகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை**
புதுச்சேரிக்கு அரசு தேர்வாணையம் (Pondicherry Staff Selection Commission) அமைக்கப்படும். இதன் மூலம் Group B மற்றும் Group C பணியிடங்களில் உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமையுடன் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**புதிய தொழில்கள், அதிக வேலை வாய்ப்பு**
புதுச்சேரியில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க, புதிய தொழிற்சாலைகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் புதிய சிறப்பு தொழில் கொள்கை அமல்படுத்தப்படும். சேதராப்பட்டில் ஐ.டி. தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். காரைக்கால், போலகம் போன்ற பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.

**கடலோர கிராமங்களில் கடல்சார் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்.**

**அரசு வேலைவாய்ப்பில் வயது வரம்பை அடைந்தவர்களுக்கு 40 வயதாக தளர்வு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

**சுயதொழில் தொடங்க கடன் உதவி**
புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்படும். இதன் மூலம் புதியவர்கள் தொழில் முனைவோர்களாக **(Young Entrepreneurs)** உருவதே எங்கள் நோக்கம்.

உள்ளூர் தொழிற்சாலைகளில் மற்றும் தொழிற்கூடங்களில் பணியாற்றும் Apprentice'களுக்கு மாதம் ரூ.5000 ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் மக்களுக்கு 75% இட ஒதுக்கீடு வழங்க சட்டம் கொண்டு வரப்படும்.**

**சம்பள உயர்வுடன் பனி உத்திரவாதம் வழங்கப்படும்**
PWD Voucher employees, NRHM, 108 Ambulance drivers, Asha, Rotti pal staffs, Temprorary College Professors, Pasic, PRTC, Papsco, Ration shop employees, Angavadi workers & all voucher workers, தற்காலிக செவிலியர்கள் மற்றும் இதர சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வுடன் பணி உத்திரவாதம் வழங்கப்படும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் ஒப்பந்த ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக நிதி குழு அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும்.

தேசிய சுகாதார இயக்கம் **(NRHM)**, எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் கல்வித் துறையில் பணியாற்றும் ஆஷா ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு உடனடியாக வழங்கப்படும். மேலும், இவர்களுக்கு பணி பாதுகாப்பும் வழங்கப்படும்.

அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர்.

**SWIGGY, ZOMOTO, ZEPTO, BLINKIT,** அமைப்பு சாரா தொழிலாளர்கள், குப்பை அள்ளும் தூய்மை பணியாளர்கள், வீட்டு வேலை செய்யும் பெண்கள், தெருவோரம் பணிசெய்யும் சுகாதார பணியாளர்கள், ஆட்டோ தொழிலாளர்கள், சிறு, குறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு அரசு சார்பாக காப்பீடு வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



# கல்வி மற்றும் இளைஞர்கள்

**புதுச்சேரி நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு சர்வதேச தரக் கல்வி**
புதுச்சேரி நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் கல்வித் தரத்தை சர்வதேச தரத்துடன் கூடிய 4 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) அமைக்கப்படும்.

**ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை இலவசம்**
கல்வி தான் சமூக ஏற்ற தாழ்வுகளைக் களையும் என்ற நோக்கத்தோடு அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி முதல் பட்டப்படிப்பு வரை முழுமையான இலவச கல்வி வழங்கப்படும்.

**மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை**
கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.2000 உதவித்தொகை வழங்கப்படும்.

**அனைத்து மாணவர்களுக்கும் கல்விக்கடன் ரத்து செய்யப்படும்.**

**மாணவர்களுக்கு இலவச லேப்டாப்**
8 ஆம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கப்பட்டு, டிஜிட்டல் கல்வி மேம்படுத்தப்படும்.

மத்திய அரசு புதிய கல்வி கொள்கை மூலம் CBSC **திணிப்பு** - இதைத் தடுக்க மாநில கல்வி கொள்கை அமல்படுத்தப்படும். மாணவர்கள் தங்களது விருப்பப்படி பாடங்களை தேர்வு செய்துகொள்ளும் உரிமை வழங்கப்படும்.

தனியார் மருத்துவ, பொறியியல் மற்றும் இதர தொழில்நுட்பக் கல்லூரிகளில் 50% இடங்களை அரசுக்கு சென்டாக் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**இளைஞர்களுக்கான ஆலோசனை குழு**
இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் எதிர்பார்ப்புகளைக் கேட்டு, வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான கொள்கைகள் உருவாக்க குழு அமைக்கப்படும்.

**புதுவை மாநிலத்திற்கு பல்கலைக்கழகம்**
புதுச்சேரி மாநிலத்தில் அரசு மருத்துவ பல்கலைக்கழகம், விவசாய பல்கலைக்கழகம், சட்ட பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 25% இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.



# சுகாதாரம்

## குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் மருத்துவ காப்பீடு

புதுச்சேரியில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் வருடத்திற்கு ஒருமுறை முழுமையான மருத்துவ பரிசோதனையுடன் ரூ.20 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும்.

## மருந்துகள் உங்கள் வீட்டுக்கு நேரடியாக

மூத்த குடிமக்கள் மற்றும் நீண்டநாள் நோயாளிகளுக்கு (சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்றவை) தேவையான மாதாந்திர மருந்துகள் வீடு தேடி வழங்கப்படும் அரசு திட்டம் ஏற்படுத்தப்படும்.

## அவசர மருத்துவ போக்குவரத்து

புதுச்சேரியிலிருந்து சென்னை மற்றும் பிற முக்கிய நகரங்களுக்கு நோயாளிகளின் மருத்துவ தேவைகளுக்காக நோயாளிகளை கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் சேவைகள் ஏற்படுத்தப்படும்.

புதுச்சேரி மாநில அரசு மருத்துவ கல்லூரியில் இதய சிகிச்சைக்குப் பிரத்யேகமான அதிசிறப்பு மருத்துவமனை திறக்கப்படும்.

அரசு பொது மருத்துவமனை புதிய வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும்.

கிராமப்புற பகுதிகளில் **உடற்கூறாய்வு** (Postmortem) வசதி கொண்டு வரபடும் .

தொடர் நோய்களால் பாதிக்கப்பட்டு மற்றும் ஆட்டிசம் பாதித்த குழந்தைகளுக்கு, வீட்டில் இருக்கும் நோயாளிகளுக்கு மாதம் ரூ.15,000 நிதி உதவி வழங்கப்படும்.



# உணவிற்கு உத்தரவாதம்

அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் ரூ.2500 மதிப்புள்ள மளிகை பொருட்கள் ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்படும்.

தற்போதைய ஆட்சியில் நியாய விலை கடைகளில் அரிசி மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த உடன் அரிசி, கோதுமையுடன் அத்தியாவசிய பொருட்களும் மாதந்தோறும் தடையின்றி வழங்கப்படும்.



# பெண்கள் முன்னேற்றம்

**பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்**
பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கண்காணிப்பு முறைகள் மேலும் வலுப்படுத்தப்படும். பெண்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்க, தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

**மாணவ - மாணவிகள் பாதுகாப்பு**
பள்ளி செல்லும் சிறுமிகள், மாணவ - மாணவிகள், கல்லூரி மாணவ - மாணவிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**பாதுகாப்பு செயலி**
பெண்களின் பாதுகாப்பை 24 மணி நேரமும் உறுதி செய்யும் வகையில் பிரத்யேக உதவி மையம் (கால் சென்டர்) அமைக்கப்படும் மேலும் புதிய கைப்பேசி செயலி (மொபைல் ஆப்) உருவாக்கப்படும்.

**குடும்பப் பெண்களுக்கு மாதம் ரூ.5000**
ஒவ்வொரு குடும்பப் பெண்களுக்கும் மாதம் ரூ.5000 உரிமைத் தொகை வழங்கப்படும்.

**பெண்களுக்கு இலவச பேருந்து பயணம்**
புதுச்சேரி முழுவதும் அனைத்து பெண்களுக்கும் இலவச பேருந்து சேவை வழங்கப்படும்.

**இல்லத்தரசிகளுக்கு புதிய வசதி**
இல்லத்தரசிகள் தங்கள் தேவைக்கு ஏற்ப பிரிட்ஜ், வாஷிங் மிஷின், ஏசி போன்ற வீட்டு வசதிப் பொருட்களை வாங்க ரூ.10,000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்.

**சுய உதவிக் குழுக்கள் வலுப்படுத்தப்படும்**
பெண்களின் வாழ்வாதாரத்தை விரிவுபடுத்த வட்டி இல்லா கடன், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான நேரடி சந்தை இணைப்புகள் மற்றும் அரசாங்க ஆதரவுப் பெற்ற தளங்கள் போன்றவை உருவாக்கப்படும்.

புதியதாக, 10,000 சுய உதவி குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு வைப்பு நிதியாக ரூபாய் 1 லட்சம் வழங்கப்படும்.

**சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி**
ஆண்டுதோறும், சுமார் 5000 சுய உதவி குழுக்களுக்கு குறைந்தது ரூபாய் 5 லட்சம் முதல் ரூபாய் 50 லட்சம் வரை கடன் வசதி செய்து தரப்படும். இதில் ரூபாய் 2 லட்சம் முதல் 5 லட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.



# வீடு மற்றும் அடிப்படை வசதிகள்

**25,000 குடும்பங்களுக்கு இலவச மனைப் பட்டாக்கள் மற்றும் வீடுகள்**
வீடு இல்லாத மற்றும் வாடகை வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு இலவசமாக 25,000 மனைப் பட்டாக்கள் மற்றும் வீடுகள் வழங்கப்படும்.

**குடிசை இல்லா புதுச்சேரியை உருவாக்க வீடு கட்ட அரசு மானியம் ரூ. 15 லட்சமாக உயர்த்தப்படும்.**

**அனைத்து வீடுகளுக்கும் தூய்மையான குடிநீர்**
நகர்ப்புறங்களில் உள்ள குடிநீர் பற்றாக்குறையை தீர்த்து, தரமான குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொ-ள்ளப்படும்.

**வீடற்றவர்களுக்கு தங்கும் வசதி**
புதுச்சேரியின் நான்கு பிராந்தியங்களில் நகரப் பகுதிகளில் சாலையோரம் வசிக்கும் வீடற்ற நபர்களுக்கு தங்கும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

பழங்குடியின மக்களுக்கு இலவசமனைப்பட்டா வழங்கப்படும்

புதுவையில் வசிக்கும் பழங்குடியினத்தை சேர்ந்த மக்களுக்கு, இலவச மனைப்பட்ட வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான வீடு கட்டும் திட்டம்

மாற்றுத் திறனாளிகளுக்கான வீடு கட்டும் திட்டத்திற்கான நிதி (மானியம்) ரூ.8 லட்சமாக உயர்த்தப்படும்.

நகரப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



# சமூக நலன்

**சிறுபான்மையினர் நலம்**
மதசார்பற்ற கொள்கையின் அடிப்படையில், சிறுபான்மையினர் நலம் காக்கப்படும்.

**வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்படும்**
வக்ஃப் வாரியத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு மறுசீரமைக்கப்படும்.

ஆதி திராவிடர் கார்ப்பரேஷன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் கார்ப்பரேஷன் மூலம் அவர்கள் பெற்ற கடன்கள் முழுவதும் ரத்து செய்யப்படும்.

ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறு நிதி, முழுமையாக அந்த சமூகத்தின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

பழங்குடியினர் இனத்தில் இருளர் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். காட்டு நாயக்கன், ஏரக்குலா, மலைக்குறவன், குறுமன்ஸ் போன்றவர்களையும் பழங்குடியினர் இனத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு**
மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளில் 5% இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

**மாற்றுத்திறனாளி மற்றும் மனநலம் குற்றியவர்கள் நலன்**
மாற்றுத்திறனாளி மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கான, உதவித்தொகை ரூ.4000-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**இந்திரா உணவகம்**
குறைந்த விலையில் சத்தான உணவு வழங்கும் இந்திரா உணவகங்கள் மாநிலம் முழுவதும் தொடங்கப்படும்.

வருடத்திற்கு 2 **சிலிண்டர்கள்** இலவசமாக வழங்கப்படும்.

தெரு நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்படும்

**பணியாற்றும் பெண்களுக்கு இலவச இருசக்கர வாகனம்**
வேலைக்கு செல்லும் அமைப்புச் சாரா பெண்களுக்கு இலவச இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு, அவர்களின் சுயநிலையும், பாதுகாப்பும் மேம்படுத்தப்படும்.

**முதியோர் உதவித்தொகை**
முதியோர் நலன் காக்கும் விதமாக, ஒவ்வொரு மாதமும் முதியோருக்கான உதவித்தொகை ரூ. 10,000-ஆக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.பாதுகாப்பும் மேம்படுத்தப்படும்.



## தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கு கார்ப்பஸ் (CORPUS) நிதி

### அம்பேத்கர் தொழில் முன்னேற்ற திட்டம்

SC/ST சமூகத்தைச் சேர்ந்த, ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு ரூ.1 கோடி வரை நிதி உதவி வழங்கப்படும்.

இதில் ரூ.25 லட்சம் முன்பணம் மானியமாகவும் மீதம் ரூ.75 லட்சம் வங்கி கடனாக வழங்கப்படும்.

தொழில், உற்பத்தி, சேவை மற்றும் வர்த்தக துறைகளுக்கு 35% மானியம் வழங்கப்படும்.

பெண் தொழில்முனைவோருக்கு 50% மானியம் வழங்கப்படும்.

வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்

- +2 முடித்தவர்களுக்கு ரூ.1,000,
- பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.2,000,
- முதுநிலை படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும்.



## உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து

**அதிக பேருந்துகள், சிறந்த இணைப்பு**
அனைத்து பகுதிகளுக்கும் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு, மக்களின் போக்குவரத்து சிரமங்களை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் திட்டம்
நெரிசல் இல்லா போக்குவரத்திற்காக சாலைகள், பாலங்கள், பைபாஸ், மேம்பாலங்கள், விரைவுப் பாதைகள் போன்றவை விரிவுபடுத்தப்படும்.

### பல அடுக்கு தள வாகன நிறுத்தம்
பல அடுக்கு தள வாகன நிறுத்தம் மூலம், சாலையோர நெரிசல் குறைந்து, போக்குவரத்து சீராகும்.

### மேம்பட்ட விமான நிலையம் மற்றும் அதிக இணைப்பு
புதுச்சேரி விமான நிலையம் விரிவுபடுத்தப்பட்டு, கூடுதல் விமான சேவைகள் மற்றும் ஹெலிகாப்டர் இணைப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

### மேம்பட்ட கழிவுர் வடிகால் அமைப்பு
கழிவுநீர் தேங்கி நிற்காத வண்ணம், சுத்திகரிப்புடன் கூடிய மேம்பட்ட வடிகால் அமைப்புகள் உருவாக்கப்படும்.



## வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல்

### சுற்றுச்சூழல் மற்றும் நீர் பாதுகாப்பு
புதுச்சேரியின் சுற்றுச்சூழலை பாதுகாக்க, நீர்வள மேலாண்மையை மேம்படுத்த, நீர்நிலைகள் மாசுபடாமல் காக்கவும், காற்று மாசுபாட்டை தடுக்கும் சுத்தமான சூழல் உருவாக்கப்படும்.

### வேளாண் கூட்டுறவு கடன் தள்ளுபடி
விவசாயிகளின் கூட்டுறவு வங்கி கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

### விவசாயிகளுக்கு மானியம்
காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட இலவச மின்சாரம், இடுப்பொருள் மானியம் பயிர் காப்பீடு, விளைபொருள் மானியம் ஆகியவை உயர்த்தி வழங்கப்படும்.

### விவசாயிகளின் நலன்
விவசாயிகள் நலன் காக்க விளை பொருட்களுக்கு இரட்டிப்பு விலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கரும்பு விவசாயிகளின் நலன் கருதிலிங்கா ரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல் சேமிப்பு கிடங்குகள் உருவாக்கப்படும், மேலும் பயன்பாட்டிலுள்ள கிடங்குகள் முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்படும்.



## விளையாட்டு

### ஒவ்வொரு கொம்யூன்களிலும் விளையாட்டு மைதானங்கள்
ஒவ்வொரு கொம்யூன்களிலும் விளையாட்டு வீரர்கள் விளையாட்டு திறனை மேம்படுத்த விளையாட்டு மைதானம் மற்றும் உட்புற விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.

**விளையாட்டு வீரர்களுக்கு முழு ஆதரவு**
மாநில மற்றும் தேசிய மட்டத்தில் சாதிக்கும் வீரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். பயிற்சிகளுக்கு விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்புற அரங்குகள் அமைக்கப்படும்.



# மீனவர் நலன்

**ஒவ்வொரு மீனவருக்கும் வலுவான ஆதரவு**
மீனவர் நலவாரியம், நவீன மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்படும். கடலோர கிராமங்கள் முழுமையான அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**மீனவர்கள் நலன்**
மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மீனவர் வளர்ச்சி குழு**
மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், மீனவர்களுக்கு வளர்ச்சி குழு அமைக்கப்படும்.

**இழப்பீடு தொகை உயத்தப்படும்**
மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பின் போது உயிரிழந்தால் 15 லட்சம் இழப்பீடாக உயர்த்தி வழங்கப்படும்.

மீனவர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஓய்வூதிய தொகை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.



# சுற்றுலா வளர்ச்சி

**சுற்றுலாவை மேம்படுத்த மணப்பட்டு நகர வளர்ச்சி**
சுற்றுலாவை மேம்படுத்த மணப்பட்டில் ஒரு சுற்றுலா நகரம் உருவாக்கப்படும்.

**உலக சுற்றுலா உள்ளூர் வளர்ச்சி**
வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் முழுமையான சுற்றுலா கொள்கை கொண்டு வரப்பட்டு, உள்ளூர் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.

ஆன்மீக சுற்றுலாவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆன்மீக சுற்றுலா செல்லும் இந்துக்கள், கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்களுக்கு தேவையான நிதி உதவி வழங்கப்படும்.

பொலிவுறு நகர திட்டம் மேம்படுத்தி முழுமையாக செயல்படுத்தப்படும்.

புதுச்சேரியில் சுற்றுலா என்ற பெயரில் கலாச்சாரத்தை சீரழிக்கும் நிலை மாற்றப்பட்டு தரமான சுற்றுலா மையமாக உருவாக்கப்படும்.



# சட்டம் மற்றும் பாதுகாப்பு

**அரசு அலுவலகங்களில் சட்ட உதவி**
அரசு அலுவலகங்களில் சட்ட உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

### வழக்கறிஞர்கள் நலன்
சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் புதுவை வழக்கறிஞர்களை புதுவை மாநிலத்தில் நீதிபதிகளாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை, புதுச்சேரியிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### காவல்துறை காலி இடங்கள் நிரப்பப்படும்
காவல்துறையில் உள்ள அனைத்து காலி இடங்களும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### சட்ட ஒழுங்கு
பொதுமக்களின் பாதுகாப்பையும் அமைதியையும் உறுதிபடுத்தும் விதத்தில் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும்.

### சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவோம்
சட்ட ஒழுங்கு சீர்குலைந்தால் குற்றச்செயல்கள் அதிகரித்து மக்கள் பாதுகாப்பு பாதிக்கப்படும். இதை தடுக்க சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### கஞ்சா இல்லா புதுச்சேரி
இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கவும், விபத்துகளை தடுக்கவும், புதுச்சேரியை கஞ்சா போன்ற போதை பொருட்கள் இல்லா மாநிலமாக மாற்றி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க தேவையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கிறோம்.

## காரைக்கால்

### காரைக்காலில் புதிய பேருந்து நிலையம்
காரைக்காலில் புதிய பேருந்து நிலையம் அமைத்து, அனைத்து பேருந்துகளையும் ஒரே இடத்தில் இணைத்து நகர அணுகல் மேம்படுத்தப்படும்.

### துறைமுகத்தில் வேலைவாய்ப்பு
காரைக்கால் துறைமுகம் அருகே உள்ள போலகம் பகுதியில், புதிய தொழில்கள் உருவாக்கப்படும். PIPDIC-ஐ மேம்படுத்தி புதிய வேலைவாய்ப்புகள் மூலம் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.

### காரைக்கால் ஜிப்மர் நிறைவுக்கு உத்திரவாதம்
காங்கிரஸ் அரசு அமைந்த ஒரு வருடத்திற்குள் காரைக்கால் JIPMER மருத்துவமனை கட்டுமானத்தை நிறைவு செய்து, உயர்தர சுகாதார சேவைகள் வழங்கப்படும்.

### காரைக்கால் - பேரளம் ரயில் பாதை
பாரதியார் சாலையில், காரைக்கால் பேரளம் ரயில் பாதை மீது மேம்பாலம் அமைத்து, சீரான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படும்.

### மாங்க்ரோவ் மற்றும் சுற்றுலா வளர்ச்சி
காரைக்கால் கடற்கரை பகுதி அருகே உள்ள அரசலாறு பகுதியில், மாங்க்ரோவ் வளர்ச்சி மற்றும் படகு சுற்றுலா சேவைகள், மூலம் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.

### கடற்கரை பாதுகாப்பு திட்டம்
காரைக்கால்மேடு, கிளிஜல்மேடு, கழகுடிமேடு பகுதிகளில் தூண்டில் கற்கள் அமைத்து, மண்ணரிப்பை தடுக்கவும், மீன்வள வளர்ச்சியை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### சிறு மீனவர்களுக்கு உதவி
தமிழ்நாடு போல சிறிய ஃபைபர் படகுகளுக்கு மானியம் வழங்கி, சிறு மீனவர்களின் வாழ்வாதாரம் காக்கப்படும்.

### கழிவுநீர் வடிகால் அமைப்பு புதுப்பிப்பு
காரைக்காலில் உள்ள பிரெஞ்சு காலத்து கழிவுநீர் வடிகால் அமைப்புகளின் பழுதுகள் நீக்கப்பட்டு, நவீனப்படுத்தி, சுகாதாரம் மேம்படுத்தப்படும்.

# நல்லதே நடக்கும்!
# வெற்றி நம் பக்கம்!



சிறந்த புதுச்சேரிக்காக மக்களிடம் வேண்டுகோள்!

அன்புடையீர்! மண்ணின் மைந்தர்களே, உறவுகளே, சகோதரர் சகோதரிகளே, வணக்கம்!
புதுச்சேரியில் மிக முக்கியமான சட்டப்பேரவைத் தேர்தலை நாம் எதிர்கொள்ளும் இந்த நேரத்தில், பணிவுடனும் நம்பிக்கையுடனும் உங்களை அணுகுகிறோம்.

## இன்றைய நிலை சவால்களில் புதுச்சேரி

புதுச்சேரி இன்று பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்து வரும் விலைவாசி, வேலைவாய்ப்பின்மை, மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்தில் ஏற்பட்ட தடைகள் போன்ற கடினமான சூழ்நிலைகளை நாம் சந்தித்து வருகிறோம்.

அதே நேரத்தில், **"DOUBLE ENGINEE"** ஆட்சியின் நிர்வாகத் தோல்விகள், அனைத்து துறைகளிலும் ஊழல், போதைப்பொருள் பரவல், மேலும் பொதுச் சுகாதாரத்தையே அச்சுறுத்தும் போலி மற்றும் தரமற்ற மருந்துகள் விநியோகம்  கடும் விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது.

## உங்கள் வாக்கின் முக்கியத்துவம்!

இந்த தேர்தல் ஒரு சிறந்த திறமையான அரசை தேர்ந்தெடுப்பதற்காக மட்டும் அல்ல.
உங்கள் குடும்பம், உங்கள் குழந்தைகள் மற்றும் புதுச்சேரியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய வாய்ப்பு.

ஒவ்வொரு வாக்கும் உங்கள் குரலாய் ஒலிக்கட்டும்.
உங்கள் ஒவ்வொரு ஓட்டும் புதுச்சேரியை மாற்றட்டும்.

உங்கள் ஆதரவை நாடி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்:
உங்களுக்காக செயல்படும் ஆட்சியை ஆதரிக்கவும்!
சிறந்த புதுச்சேரியை உருவாக்கும் பயணத்தில் பங்கேற்கவும்!

## இந்திய தேசிய காங்கிரசுக்கும் கூட்டணி கட்சிகளுக்கும் வாக்களிக்கவும்!
## நம்பிக்கை, முன்னேற்றம் & மரியாதையை மீண்டும் கொண்டு வருவோம்.




புதுவை மக்களின் ஒரே நம்பிக்கை காங்கிரஸ்

Issued by Gen Sec PPCC